2. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

MR. CHAIRMAN : I have to announce to the House, that under rule 6 of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members of the Legislative Council to be the panel of Vice-Chairmen for the 46th session of the Legislative Council under the Constitution of India :— பி.ப, 4-30

1. Thiru S. T. Adityan;

2. Thiru N. Wilson Appollos;

3. Thiru S. Narayanaswamy;

4. Thiru S. Jayarama Reddiar

3. கவன ஈர்ப்பு.

சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையின் தொழிலாளர் வருகைப் பதிவேட்டில் முறைகேடுகள் சம்பந்தமாக மாநகராட்சிப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டது குறித்து

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் :

"சென்னை மாநகராட்சிப் பணியாளர்கள் சிலரால், மாநகராட்சி நிதியில் பல கோடிக் கணக்கான ரூபாய் கையாடல் செய்யப்பட்டதாகக் கூறப்படுவது பற்றியும், மாநகராட்சி மின்சாரத் துறையின் தொழிலாளர் வருகைப் பதிவேட்டில் முறைகேடுகள் இருப்பதாகக் கூறப்படுவது பற்றியும், இது சம்பந்தமாக மாநகராட்சிப் பணியாளர்கள் சிலர் கைது செய்யப்பட்டது குறித்தும்" . . .

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையில் பொய் வருகைப் பதிவேடுகள் தயாரித்துச் சரிவரச் சோதித்து ஆய்வு செய்யாமலேயே அவற்றின்பேரில் ஊதியம் கொடுக்கப் படுவதாக 1973 செப்டம்பர் முதல் வாரத்தில் மாநகராட்சி ஆணையாளருக்குச் சில புகார்கள் கிடைத்தன. மின்சாரத் துறையில் தொழிலாளர் வருகைப் பதிவேடுகள் தயாரித்து ஏற்பளிப்பதில் முறைகேடுகள் இருப்பது குறித்துச் சில கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாகப் பொறுப்பாக இருந்ததாகத் தெரியவந்த தட்டச்சர் திரு. எம். கண்ணப்பன் என்பவரைச் சென்னை மாநகராட்சி ஆணையாளர் உடனடியாக 11—9—1973 அன்று பதவியிலிருந்து